செய்தி குறிப்பு எண்: 76 நாள்: 01.11.2009

# தமிழகத்திலுள்ள இலங்கை அகதிகள் பிரச்சினை.

# முதலமைச்சர் கலைஞர் அவசரக் கூட்டம்.

# 1–11–2009

இலங்கையில் தமிழ் அகதிகள் முள்வேலி முகாம்களுக்குள்ளே அவதிப்படுவதை எண்ணி கண்ணீர் உகுத்து அவர்களை அந்த முகாம் களிலிருந்து விடுவிக்க தமிழகத்திலிருந்து தி.மு.க., காங்கிரஸ் கட்சி, விடுதலை சிறுத்தைகள் ஆகிய கட்சிகளைச் சேர்ந்த பத்து நாடாளு மன்ற உறுப்பினர்கள் ஒரு குழுவாகச் சென்று – அவர்கள் நிலை அறிய செய்த ஏற்பாட்டின் விளைவாக மாபெரும் வெற்றியோ, மகத்தான வெற்றியோ கிடைக்கா விட்டாலுங்கூட; அடைபட்டிருந்த மூன்று இலட்சம் பேர்களில் சுமார் ஒரு இலட்சம் பேரையாவது இதுவரை அந்தக் கூண்டுகளிலிருந்து வெளியே கொணர்ந்து அவர்கள் சொந்த இருப்பிடங்களுக்குச் செல்வதற்கான வழி வகை செய்யப்பட்டுள்ளது. அது போதுமானதல்ல; மேலும் அவர்கள் அனைவரையும் விடுவித்து, வாழ்வாதாரங்களை வகுத்தளித்து மீண்டும் அமைதியான நல்வாழ்வு பெற்றிட இந்திய அரசின் முயற்சிகளும் அதற்காக நமது தூண்டுதல்களும் தொடங்கப் பட வேண்டுமென்றே கருதுகிறோம்.

இந்த நிலையில் ஏற்கனவே நான் இந்திய மண்ணில் அகதிகளாகக் குடியேறியிருக்கின்ற இலங்கைத் தமிழர்களை இந்த மண்ணின் நிரந்தர குடிமக்களாக ஆக்கிட வேண்டுமென்று, அதற்கான முயற்சியிலே ஈடு பட்டு நமது வேண்டுகோளை பரிசீலிப்பதாக இந்திய பேரரசின் சார்பிலும் வாக்களிக்கப்பட்டிருக்கின்றது.

இதற்கிடையே இலங்கை முகாம்களில் இருக்கின்ற தமிழர்களை விடுவிக்க வேண்டுமென்ற முயற்சி ஒரு புறமிருக்க தமிழ்நாட்டில் தொடர்ந்து பல ஆண்டுக் காலமாக இலங்கையிலிருந்து வந்த தமிழ்

அகதிகள் நிலை என்ன என்பதைச் சுட்டிக் காட்டுகின்ற வகையிலும் இன்னும் சொல்லப் போனால் நம் நெஞ்சத்தைக் குத்திக் காட்டுகின்ற நிலையிலும் நவம்பர் 11ஆம் தேதியிட்ட இந்தியா டுடே வார இதழின் தமிழ்ப் பதிப்பில் வெளி வந்துள்ள நீண்ட கட்டுரை ஒன்றை நான் படிக்க நேர்ந்தது. இலங்கையில் அகதிகளாக உள்ள தமிழர்கள் வாடி வதங்கு வது ஒரு புறமிருக்க இங்கே நமது தமிழ் மண்ணில் அகதிகளாக வந்து சேர்ந்துள்ள பல்லாயிரக்கணக்கான இலங்கை தமிழ் மக்கள் தாங்கள் வாழ்வதற்குரிய அடிப்படை ஆதாரங்கள், வசதிகள் எதுவுமின்றி எத்துணை துன்பங்களுக்கு உள்ளாகியிருக்கிறார்கள் என்பதை புகைப் படங்களோடு அந்த வார ஏடு வெளியிட்டுள்ள காட்சிகளைக் கண்டு, கண்ணீர் பெருக்கியதோடு அவர்கள் கவலைகளை உடனடியாகத் தீர்ப்பதற்கு அவசர நடவடிக்கை மேற்கொள்வது தான் நமது கடமை ஆகும் எனக் கருதி, இலங்கைத் தமிழ் அகதிகளைப் பாதுகாத்திடவும், அவர்கள் தம் பட்டினி போக்கிடவும், படிப்பு வாய்ப்பு வழங்கிடவும், நான் படித்த அந்த வார இதழில் சுட்டிக் காட்டப் பட்டுள்ள குறைகளை நீக்கி தாய் மண்ணில் வாழ வழியின்றி தமிழ் மண்ணில் வாழ்வதற்கு வந்தவர்களை அமைதியாக வாழச் செய்திட இங்குள்ள தமிழக அரசின் அதிகாரம் பெற்ற எல்லா துறையினருக்கும் பொறுப்பு உண்டு என்பதை நிலை நாட்டி அவர்களுக்கு வாழ்வளிக்க ஒல்லும் வகையெல்லாம் உழைத்திடுவோம் என்ற உறுதியோடு செயல்பட வேண்டுமென தொடர்புடைய துறையினர் அனைவருக்கும் ஆலோசனை வழங்கி – ஆய்வுகள் மேற்கொண்டு – ஆவன செய்திடவும் – அவர் தம் அல்லல் போக்கிடவும் – அட்டியின்றி உடனே அரும்பணிகள் தொடரப்பட வேண்டுமென்று ஆணையிடுவதற்கு வாய்ப்பாக நாளை 2–11–2009 காலை 10 மணிக்கு தமிழகத் தலைமைச் செயலகத்தில் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள், அதிகாரிகள் ஆகியோரை அழைத்து விவாதிக்கவிருக்கிறேன். இலங்கை தமிழ் அகதிகளுக்கு இன்னல்

இம்மியளவும் இல்லாத வகையில் இன்புற்று வாழ்ந்திட நாளைய கூட்டத்தின் வாயிலாக தேவையான நிதி ஒதுக்கி, அவர் தம் தேவைகள் நிறைவு செய்யப்பட வழி வகுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9